செ.வெ.எண்.773 நாள்.30.10.2009

செய்திக் குறிப்பு

தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் மோப்ப நாய்கள் அடங்கிய இடர் மீட்பு அணி துவக்கி வைத்தல்

இயற்கைச் சீற்றங்களான நிலநடுக்கம், புயல், வெள்ளம், ஆழிப்பேரலை, நிலச்சரிவுகள் போன்ற பேராபத்துகளின்போதும் மற்றும் சமூக விரோதிகளால் ஏற்படுத்தப்படும் சேதங்களில் சிக்குண்டு உயிருக்கு போராடுபவர்களை உயிருடன் காப்பாற்றும் உன்னதமான சேவையை தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை மேற்கொண்டு வருகிறது. மேற்படி பேராபத்துகளின்போது கட்டட இடிபாடுகளில் கண்ணுக்குப் புலப்படாத இடங்களில் சிக்குண்டவர்களையும் உடனடியாக கண்டறிந்து காப்பாற்றிட ஏதுவாக, தீயணைப்பு மீட்புப் பணிகள் துறை வீரர்களுக்கு இடர் மீட்பு பணிகளில் உதவியாக இருக்கும் பொருட்டு, உயிர்களை கண்டறியும் 6 மோப்ப நாய்கள் கொண்ட ஒரு இடர் மீட்பு அணி ஏற்படுத்த மோப்ப நாய்கள் வாங்கவும் மற்றும் அவற்றினை பராமரிப்பதற்காகவும் ரூ. 2 இலட்சம் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும், மோப்ப நாய்களை தங்க வைப்பதற்காக இதற்கென வடிவமைக்கப்பட்ட கட்டடம் ரூ. 6 இலட்சம் செலவில் கட்டித் தரப்பட்டுள்ளது. மேற்படி இடர் மீட்பு அணிக்காக வாங்கப்பட்டுள்ள மோப்ப நாய்களுக்கும் மற்றும் அவற்றினை கையாள்பவர்களுக்கும் உரிய பயிற்சி அளிக்கப்பட்டு பொதுமக்களின் சேவைக்காக இடர் மீட்பு அணி தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலை நாடுகளில் இத்தகைய மோப்ப நாய்கள் பிரிவு தீயணைப்புத் துறையில் இயங்குகிறது. இந்தியாவிலேயே முதல் முறையாக இத்தகைய மோப்ப நாய்கள் பிரிவு தமிழகத்தில் துவங்கப்படுவது சிறப்பு அம்சமாகும். இந்த இடர் மீட்பு அணி பொதுமக்களின் சேவைக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 30.10.2009 அன்று காலை 10.30 மணியளவில் துவக்கி வைக்கப்படுகிறது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.